7, 8 பேர் ; அது போலவே போத்தன் ஜோசப் அல்லது நெல்லிப்புழா ஜோஸ் பேரால் கேரளாவில் இருந்து ஒரு 7,8 நிறுவனங்கள் அதைபோலவே கர்நாடகாவில் இருக்கின்ற கோடேஸ், அதன் பேரால் ஒரு 7, 8 நிறுவனங்கள், ஆக நாம் அன்றைக்குக் கேட்ட திராவிட நாடு ‘‘ புல்பில் ’’ ஆகிவிட்டது. ஆந்திராவிலே இருந்து ஒரு குரூப், கேரளாவிலே இருந்து ஒரு குரூப், கர்நாடகத்திலே இருந்து ஒரு குரூப், தமிழன் தலையிலே கையை வைத்துக் கொண்டு இருக்க வேண்டியதுதான் யார் யாரோ அவர்களுடைய விட்டிலே பை நிரப்பிக்கொள்ள தமிழன் தன் தலையிலே கை வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருக்கிறது என்பதை மாத்திரம் எடுத்துக் கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நம்முடைய அனைத்துக் கட்சித் தலைவர்களும் நாளை காலை அமைச்சரின் பதிலுரையை வைத்துக் கொள்ளலாம் என்றும், இன்று மாலை வேண்டாம் என்றும் விரும்புகிறார்கள். நாளை கேள்வி நேரம் வேண்டாம் என்றும் முடிவெடுத்து இருக்கிறார்கள். அதையே தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(7) அரசினர் தீர்மானம்,

விதி 31-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

‘‘ ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 31-ஐ நாளை 10—3—1982 அன்று தளர்த்த வேண்டும் ’’.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 10—3—1982 அன்று காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-23 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.